ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

14.05.2026

1. அருள்மிக்க வேலவன் துணைபட
ஆளுமை உலகினில் ஞானவழி
பெருமைபட நடந்தேறிட இருக்க
புண்ணிய வழிதேடி வாரீரென

2. என அழைத்து அரங்கன் யானும்
இயம்பிடுவேன் பராபவ தகர் திங்கள்
ஞானம்பட பஞ்சகடை குருவார ஆசி
நாட்டிடுவேன் உலகோர் நலம்பெற

3. நலம்தரும் பிரணவக் குடிலை
நல்கியே உலகோர் வருக
பலம்மிக்க ஞானவான்களெனும்
படைகள் பெருகி மாற்றம் காணும்

4. காணவே அரங்கன் யான் காட்டும்
கண்டுரைப்பேன் சன்மார்க்க நெறி
ஞானவழி காட்டும் நல்நெறியாகும்
நம்பகம் வைத்து மக்கள் வர

5. வருபவர் தெளிவு காண்பதுடன்
வரலாறு காணும்படி குடியவர்களும்
பெருமைமிக்க ஞானவழி வந்து
புண்ணியத்தின் வழிதனை அறிந்து

6. அறிந்து தானதருமம் வழி
அவரவரும் ஈடுபாடு கூட்டி
அருந்தவசி என் பிரணவக்குடிலில்
அன்னதான சேவையில் உதவி

7. உதவியே தொடர் தருமம் பெருக்க
உயர்வான பிரணவக் குடிலுக்கு
ஆதரவு தந்து தொண்டர்களாகி
அரங்கனென் ஆசி ஏற்று நடக்க

8. நடக்கவே நடைமுறை பலன்கள்
நன்மை தரும் வண்ணம் மாறி
இடரின்றி வாழ்வில் மாற்றமும்
எல்லா வகை தேற்றமும் கண்டு

9. கண்டுமே கந்தனே விரும்புகின்ற
கலியுக ஞானிகளாக மக்கள்
உண்டாகி உலக மாற்றமும்
உயர்வாய் நடக்க செயல்படும் வண்ணம்

10. வண்ணம் அற்புதம் தன்னை
வழங்குவோம் மகா சக்திகள் தானும்
எண்ணம் வழி யாமே இணைந்து
எல்லோரும் சமம் எங்கும் எதிலும்

11. எதிலும் சன்மார்க்கம் தழைக்க
எங்கள் தலைவன் வேலவன்
ஆதரவு ஆளுமை தருகின்ற
அன்பர்களே உலகை ஆளநேரும்
அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி